2009 ஜூலை 7]

இணைப்பு I

(666 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 4—ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

அறிவிப்புகள், 2009–2010

1. 'புதிரை வண்ணான்' நல வாரியம்

பொருளாதார, சமூக, கல்வி நிலைகளில் மிகவும் அடித்தளத்தில் வாழ்ந்து வரும் "புதிரை வண்ணான்" இனத்தைச் சார்ந்த மக்கள், மிகக் குறைவான எண்ணிக்கையில் இருந்தாலும், அவர்களின் நலத்திலும் அக்கறை கொண்ட முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள், அவர்களுக்கென்று ஒரு தனி நல வாரியம் அமைத்து மற்ற நல வாரிய உறுப்பினர்களுக்கு அளிக்கப்படும் அனைத்து சலுகைகளும் அளித்திட முடிவு செய்துள்ளார்கள்.

2. வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குதல்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களின் அறிவுத்திறனை மேம்படுத்த, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை நடத்தும் அனைத்து விடுதிகளுக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இவ்வாண்டில் வழங்கப்படும்.

பள்ளிகளை நிலை உயர்த்துதல்

3. 6 ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 6 ஆதி திராவிடர் உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்படும்.

4. 2 அரசு உண்டி உறைவிட பழங்குடியினர் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 2 அரசு உண்டி உறைவிட பழங்குடியினர் உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்படும்.

சிறப்பு மாநில நிதி மூலம் செயல்படுத்தவுள்ள புதிய திட்டங்கள்

இந்த அரசு பொறுப்பேற்றபின் முதன் முதலாக ஆதி திராவிடர் நலனில் சிறப்பு அக்கறைகொண்டு கடந்த மூன்று ஆண்டுகளாக

சிறப்பு மாநில நிதி உதவி வழங்கி வருவது போன்று நடப்பு நிதியாண்டு 2009-2010 ஆம் ஆண்டிலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்பு மாநில நிதி உதவியாக ரூ. 25.00 கோடியினை ஒதுக்கியுள்ளார்கள். இந்நிதியிலிருந்து தாட்கோமூலமாக 2009-2010 ஆம் ஆண்டில் பின்வரும் பயிற்சிச் திட்டங்கள் செயல்படுத்தப்படும்:

5. இதழியல் பயிற்சி

வளர்ந்து வரும் பத்திரிகை மற்றும் இதழ்களில் தொழில் சார்ந்த இதழாளர்களின் தேவை அதிகரித்து வருகிறது. மேலும் இவ் இதழாளர்கள் அச்சு ஊடகம் (Print Media), தொலைக்காட்சி ஊடகம் (Television Media), வானொலி பகுதி (Radio Stream) போன்ற தொழில் நுட்பம் மிகுந்த துறைகளில் கை தேர்ந்த வல்லுநர்களாக வேலை பார்க்க வாய்ப்புள்ளதால் 10 நபர்களுக்கு ரூ. 20.00 இலட்சம் செலவில் இப்பயிற்சி அளிக்கப்படும்.

6. கடல்சார் பயிற்சி

கடல் சார்ந்த துறையில் அதிக வேலைவாய்ப்பு இருந்து வருகிறது. இத்துறையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களின் பங்கு மிகவும் குறைவாக உள்ளதால் இத்துறையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் பங்களிப்பை அதிகப்படுத்துவதற்காக கடல்சார் துறையில் பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பயிற்சி சென்னையிலுள்ள இந்திய கடல்சார் பல்கலைக்கழகம் (Indian Maritime University, Chennai Campus), மற்றும் தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம் (Tamil Nadu Maritime Academy) மூலமாக 100 இளைஞர்களுக்கு ரூ.150.00 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்படும்.

7. GRE/ TOEFL / GMAT / CAT போன்ற தேர்வுகளுக்கான பயிற்சி

பொறியியல் மற்றும் மருத்துவப் படிப்பு படித்த இளைஞர்கள் மேற்படிப்பிற்காக அதிகமாக வெளிநாடுகளுக்குச் செல்கிறார்கள். வெளிநாடு சென்று உயர் கல்வி படிப்பதற்கும் இந்திய உயர் கல்வி நிறுவனங்களில் படிப்பதற்கும் GRE / TOEFL / GMAT / CAT போன்ற தேர்வுகளில் தேர்ச்சி பெறுவது அவசியம். எனவே, இதுபோன்ற தேர்வுகளுக்குத் தயார் செய்யும் இளைஞர்களை ஊக்கப்படுத்த 200 நபர்களுக்கு ரூ.40.00 இலட்சம் செலவில் பயிற்சிகள் அளிக்கப்படும்.

2009 ஜூலை 7]

8. தொழிற்சார் சிறப்புப் படிப்புகளுக்கான நிதியுதவி

தற்போது தமிழ்நாட்டில் பட்டயக் கணக்கர் (CA) செலவுக் கணக்கர் (CWA), போன்ற படிப்புகளில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆர்வம் காட்டுவது குறைவாக உள்ளது. இந்நிலையை மாற்ற இப்படிப்பு படிக்கும் மாணவர்களின் கல்விக் கட்டணம், புத்தகக் கட்டணம், தேர்வுக் கட்டணம் முதலியவற்றை அரசே ஏற்கும். இதற்காக 75 நபர்களுக்கு ரூ.25.00 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும்.

9. தேசிய நிறுவனங்கள்மூலம் பயிற்சி

தேசிய நிறுவனங்களான CIPET மூலம் பிளாஸ்டிக் பொருட்கள் தயாரித்தல் பயிற்சியும், ATDC மற்றும் NIFT மூலம் ஆயத்த ஆடை வடிவமைத்தல் பயிற்சியும், CFTI மூலமாக தோல் பொருள் மற்றும் காலணி தயாரித்தல் பயிற்சியும், TACLIT மூலம் தகவல் தொழில்நுட்பப் பயிற்சியும் வழங்கப்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கி உடனடி வேலை கிடைக்க உறுதிசெய்யும் வகையில் 1,250 இளைஞர்களுக்கு ரூ.200.00 இலட்சம் செலவில் பயிற்சிகள் அளிக்கப்படும்.

10. திரைப்படம் சார்ந்த துறையில் பயிற்சிகள்

திரைப்படத் துறையில் ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியின இளைஞர்களின் பங்களிப்பு மிகவும் குறைவாக இருக்கிறது. இத்துறையில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு விஷுவல் மீடியா, சினிமாட்டோகிராபி மற்றும் ஒலிப்பதிவு போன்ற திரைப்படம் சார்ந்த பயிற்சிகள் 340 நபர்களுக்கு, ரூ.85.00 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

11. விமானப் பணிப் பெண் பயிற்சி

கடந்த ஆண்டுகளில் விமானப் பணிப் பெண் பயிற்சி, விமானப் பணியாளர் பயிற்சி வழங்கியது போன்று, நடப்பாண்டிலும் 25 பெண்களுக்கு விமானப் பணிப் பெண் பயிற்சி, ரூ.25.00 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

12. விடுதி மாணவர்களுக்கு ஆங்கிலப் பேச்சாற்றல் பயிற்சி

கிராமப்புற இளைஞர்களும், ஆங்கிலத்தில் பேசும் திறமையை வளர்க்க ஆதி திராவிடர் விடுதிகளில் தங்கிப் பயிலும் 4,000 இளைஞர்களுக்கு ரூ.120.00 இலட்சம் செலவில் ஆங்கில பேச்சாற்றல் பயிற்சி அளிக்கப்படும்.

[2009 ஜூலை 7

13. மூன்றாண்டு செவிலியர் பட்டயப் பயிற்சி

மூன்றாண்டு செவிலியர் பட்டயப் படிப்பு படித்தவர்களுக்கு அதிக வேலைவாய்ப்பு இருந்து வருகிறது. இதனைக் கருத்தில் கொண்டு தற்போது அரசுக் கல்லூரிகளில் ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்களுக்கு இருந்து வரும் (18 சதவீத) ஒதுக்கீட்டுடன் கூடுதலாக 125 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின பெண்களுக்கு அரசுக் கல்லூரிகளில் பயிற்சி அளிக்கப்படும்.

14. கல்வியியல் பட்டயப் படிப்பு (பி.எட்.) பயிற்சி

கல்வியியல் பட்டயப் படிப்பு (பி.எட்.) படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகம் இருப்பதால் அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் இப்படிப்பிற்காக 200 நபர்களுக்கு ரூ.50.00 இலட்சம் செலவில் நிதியுதவி அளிக்கப்படும்.

15. உணவு தயாரித்தல் மற்றும் பரிமாறுதல்

விருந்தோம்பல் துறையில் அதிக வேலைவாய்ப்பு பெருகி வருவதால் உணவு தயாரித்தல் மற்றும் உணவு பரிமாறுதல் பயிற்சி நற்பெயர் பெற்ற நிறுவனங்கள்மூலம் 2,000 நபர்களுக்கு ரூ.300.00 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

16. உதவி செவிலியர் பயிற்சி

உள்நாடுகளிலும், வெளிநாடுகளிலும் உதவி செவிலியர் வேலைக்கு வாய்ப்பு அதிகமிருப்பதால் 1,000 நபர்களுக்கு நற்பெயர் பெற்ற பயிற்சி நிறுவனங்கள்மூலம் ரூ. 200.00 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்படும்.

17. கனரக வாகன ஓட்டுனர் பயிற்சி

கனரக வாகன ஓட்டுனர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகம் இருப்பதால், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு கனரக வாகன ஓட்டுனர் பயிற்சி, சாலைப் போக்குவரத்து நிறுவனம் (Institute of Road Transport) மற்றும் அசோக் லைலேண்ட் நிறுவனம் மூலம் 120 நபர்களுக்கு ரூ.25.00 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

2009 ஜூலை 7]

18. ஜேசிபி இயக்குபவர் பயிற்சி

ஜேசிபி இயக்குபவர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகம் இருப்பதால், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு ஜேசிபி இயக்குபவர் பயிற்சி நற்பெயர் பெற்ற தனியார் நிறுவனங்கள் மூலம் 300 நபர்களுக்கு ரூ.12.50 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

19. ஏசி. மெக்கானிக் / டீசல் மெக்கானிக் வெல்டிங் பயிற்சி

ஏ.சி. மெக்கானிக் மற்றும் டீசல் மெக்கானிக் பயிற்சிகளுக்கு வெளிநாடுகளிலும், தொழிற்கூடங்களிலும் வேலைவாய்ப்பு அதிகம் உள்ளதால் 1,000 நபர்களுக்கு ரூ. 100.00 இலட்சம் செலவில் நற்பெயர் பெற்ற நிறுவனங்கள்மூலம் பயிற்சி அளிக்கப்படும்.

20. கணினி பயிற்சி

கணினி துறையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களின் பங்கு மிகவும் குறைவாக உள்ளதால் இத்துறையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் பங்களிப்பை அதிகப்படுத்த 2,000 நபர்களுக்கு ரூ.325.00 இலட்சம் செலவில் கணினி பயிற்சி அளிக்கப்படும்.

21. கண் சிகிச்சை உதவியாளர் பயிற்சி

கண் சிகிச்சைக்கான சிறப்பு உதவியாளர்களின் தேவை அதிகரித்து வருவதால் இவ்வாண்டு ரூ.40.00 இலட்சம் செலவில் தமிழகத்தின் சிறந்த கண் மருத்துவமனைகள்மூலம் 200 நபர்களுக்கு கண்சிகிச்சை உதவியாளர் பயிற்சி அளிக்கப்படும்.

22. தொழில் முனைவோருக்கு மூலதன உதவி

ஆதி திராவிடர்/பழங்குடியின மக்களில் பெரும்பான்மையோர் சிறந்த தொழில் முனைவர்களாக வரக்கூடிய தகுதிகள் அனைத்தும் பெற்றிருந்தும் பொருளாதார வசதியின்மையால் தொழில் துவங்க இயலாத நிலை உள்ளது. சுமார் 5 நபர்களை தொழிலதிபர்களாக்கும் முயற்சியில் சிறப்பு மூலதன மானியமாக ரூ.50.00 இலட்சம் அல்லது 10 சதவீதம் இதில் எது குறைவோ அதனை அரசு மானியமாகவும், மீதத் தொகையினை வங்கி அல்லது நிதி நிறுவனங்கள்மூலமாக கடனாகவும் பெறுவதற்கு வழிவகை செய்யப்படும்.

[2009 ஜூலை 7

23. தொடக்கப் பள்ளி ஆசிரியர் பயிற்சி

*100 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு தொடக்கப் பள்ளி ஆசிரியர் பயிற்சி (*Secondary Grade training-Diploma in Teacher Education) *அளிக்கப்படும்.*

24. மருத்துவ ஆய்வுக்கூட தொழில்நுட்பாளர் பயிற்சி

*100 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு மருத்துவ ஆய்வுக் கூட தொழில்நுட்பாளர் பயிற்சி (*Certificate of Medical Laboratory Technician) *வழங்கப்படும்.*

25. அழகுக் கலை பயிற்சி

*500 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு அழகுக் கலை பயிற்சி (*Beautician Course) *வழங்கப்படும்.*

26. தையற்கலை பயிற்சி

*500 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு தையற் கலை பயிற்சி (*Tailoring Course) *வழங்கப்படும்.*

2009–2010 ஆம் ஆண்டில் புதிய அறிவிப்பாக வெளியிடவிருக்கும் பகுதி–II திட்டங்கள்

27. தலைமைச் செயலகத்தின் பயன்பாட்டுக்காக 21 கணினிகள் வாங்குதல்

அரசு அலுவலகங்களை கணினிமயமாக்குவதற்கு அரசு முனைப்புடன் செயல்படுவதால் அரசின் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் அன்றாடப் பணிகளை துரிதப்படுத்த 21 கணினிகள் மற்றும் துணை பாகங்கள் ரூ.8.40 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

28. ஆதி திராவிடர் நல ஆணையர் அலுவலகத்தில் 15 கணினிகள் வாங்குதல்

ஆணையர் அலுவலகத்தினை நவீனப்படுத்தவும், அன்றாடச் செயல்களை துரிதப்படுத்தவும் ரூ. 6.00 இலட்சம் செலவில் 15 கணினிகள் வாங்கப்படும்.

2009 ஜூலை 7]

29. அரியலூர் மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலகத்திற்கு நிகரி (FAX) மற்றும் ஒளிநகல் (Xerox) வழங்குதல்

புதியதாக உருவாக்கப்பட்ட அரியலூர் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டு நிகரி (Fax) மற்றும் ஒளிநகல் (Xerox) இயந்திரம் ரூ.0.60 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

30. ஆதி திராவிடர் நல ஆணையரகம் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களுக்கு ஈப்பு மாற்றி வழங்குதல்

ஆதி திராவிடர் நல ஆணையரகம் அலுவலகம், மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் பயன்படுத்தும் ஈப்புகள் மிகவும் மோசமான நிலையிலுள்ளதால் அதனை மாற்றி புதிய ஈப்புகள் வாங்கப்படுகின்றன. இதற்கென ரூ.35.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

31. 152 விடுதிகளுக்கு எரிவாயு இணைப்பு வழங்குதல்

தமிழ்நாட்டில் உள்ள அரசுக் கட்டடங்களில் இயங்கும் ஆதி திராவிடர் நல மாணவ/மாணவியர் விடுதிகளுக்கு எரிவாயு இணைப்பு படிப்படியாக வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 152 விடுதிகளுக்கு ரூ.45.60 இலட்சம் செலவில் 2009-2010 ஆம் ஆண்டில் எரிவாயு இணைப்பு வழங்கப்படுகிறது.

32. 130 பள்ளிகளுக்கும், 141 விடுதிகளுக்கும் குடிநீர் சுத்திகரிப்புக் கருவி வழங்குதல்

சுகாதார சீர்கேட்டினைத் தவிர்க்கும் பொருட்டு, இவ்வரசானது ஆதி திராவிடர் மாணவர்கள் பயிலும் பள்ளிகளிலும், தங்கும் விடுதிகளிலும் சுத்தமான குடிநீரை வழங்க முடிவு செய்து, முதற்கட்டமாக 130 ஆதி திராவிடர் பள்ளிகளுக்கும், 141 ஆதி திராவிடர் நல விடுதிகளுக்கும் குடிநீரைச் சுத்தப்படுத்தும் கருவிகள் ரூ.36.36 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

33. நாமக்கல் மாவட்டம்–களங்காணி மேல்நிலைப் பள்ளியை பழுதுபார்த்தல்

நாமக்கல் மாவட்டத்தில் களங்காணி என்ற ஊரிலுள்ள ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளியானது மிகவும் பழுதடைந்துள்ளது. பழுதினைச் சரிசெய்ய ரூ.12.09 இலட்சம் 2009-2010 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2009 ஜூலை 7

34. திருவள்ளூர் மாவட்டத்தில் 25 விடுதிகள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்

திருவள்ளூர் மாவட்டத்தில் மொத்தம் 29 விடுதிகள் ஆதி திராவிடர் மாணவர்களுக்காகவும், 10 விடுதிகள் ஆதி திராவிடர் மாணவிகளுக்காகவும் இயங்கி வருகின்றன. அவைகளில் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ள 25 விடுதிகளில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.30.00 இலட்சம் வழங்கப்படுகிறது.

35. சாய்வு நாற்காலியுடன்கூடிய மேஜை ரூ.6920/– வீதம் 50 பள்ளிகளுக்கு 30 இருக்கைகள்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் பள்ளிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் வகையில் முதற் கட்டமாக 50 பள்ளிகளுக்கு ஒவ்வொரு பள்ளிக்கும் 30 வீதம் சாய்வு நாற்காலியுடன் கூடிய மேஜைகள் ஒன்று ரூ.6,920/- வீதம் மொத்தம் ரூ.104.40 இலட்சம் செலவில் வழங்கப்படுகிறது.

36. 130 உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.300/– வீதத்தில் 50 பிளாஸ்டிக் நாற்காலிகள் வழங்குதல்

ஆதி திராவிடர் நல பள்ளிகளில் அன்றாடம் நடக்கும் ஆசிரியர் கூட்டங்கள் மற்றும் ஏனைய கூட்டங்களை சிறப்புற நடத்த முதல் கட்டமாக 130 உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு 50 பிளாஸ்டிக் நாற்காலிகள் ஒன்று ரூ.300 வீதம் மொத்தம் ரூ.19.50 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்படும்.

பழங்குடியினர் நலம்

37. உண்டி உறைவிட விடுதிகளைப் பழுது பார்த்தல் மற்றும் புதிய கட்டடங்கள் கட்டுதல்

பழங்குடியினர் விடுதிகள்/உண்டி உறைவிடப் பள்ளிகளில் பழுதுபார்த்தல், பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் புதிய கட்டடங்கள் கட்டவும் 2009-2010 ஆம் நிதி ஆண்டில் ரூ.78.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

2009 ஜூலை 7]

38. 14 உண்டி உறைவிட மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு மரச்சாமான்கள் வாங்குதல்

14 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளுக்கு மேஜை நாற்காலிகள் வழங்க ரூ.20.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

39. 4 கணினிகள் மற்றும் துணை பாகங்கள் பழங்குடியினர் நல இயக்குநரகத்திற்கு வாங்குதல்

பழங்குடியினர் நல இயக்குநரகத்திற்கு, 4 கணினிகள் மற்றும் உதிரி பாகங்கள் ரூ.1.60 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

40. பழங்குடியினர் நல இயக்குநரகத்திற்கு நிகரி (Fax) மற்றும் ஒளிநகல் (Xerox) இயந்திரங்கள் வாங்குதல்

பழங்குடியினர்களுக்கு பல முன்னேற்றத் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதால், பழங்குடியினர் நல இயக்குநரகத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டு நிகரி (Fax) மற்றும் ஒளிநகல் (Xerox) இயந்திரம் ரூ.0.60 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

41. நாமக்கல், சேலம், திருவண்ணாமலை, திண்டுக்கல் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள அரசு உண்டி உறைவிடப் பள்ளிகளை பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல்

நாமக்கல், சேலம், திருவண்ணாமலை, திண்டுக்கல் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள அரசு பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிகளில் மேம்பாடு மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள ரூ.71.85 இலட்சம் 2009-2010 ஆம் நிதியாண்டில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

42. 100 அரசு பழங்குடியினர் நல உண்டி உறைவிட ஆரம்ப பள்ளிகளுக்கு பள்ளி ஒன்றுக்கு ஒரு அமரும் பலகை ரூ. 3,000/– வீதம் 10 அமரும் பலகைகள் வழங்குதல்

100 அரசு பழங்குடியினர் நல உண்டி உறைவிட ஆரம்பப் பள்ளிகளுக்கு மொத்தம் 1,000 அமரும் மரப் பலகைகள், பலகை ஒன்றுக்கு ரூ.3,000/- வீதம் மொத்தம் ரூ.30.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.